Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | } | |
| Miscellaneous | .. | .. | } | |
| Preliminary Register | .. | .. | } | **S.C.** 153/2022 |
| Sessions | .. | .. | } | |
| | | } | Prosecution – **PW**21 | |
| Deposition of witness for | | } | Defence – | |
| | | } | Court – | |

| | | |
|---|---|---|
| Name | : | **டாக்டர். அருள்மோகன்** |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.10.2024

(எதிரி 1 ஆஜர், எதிரிகள் 2, 3 ஆஜர் இல்லை. 2, 3–ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.)

**முதன்மை விசாரணை:–**

நான் தற்போது இராமநாதபுரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.03.2021 அன்று அதே மருத்துவமனையில் நான் உதவி மருத்துவராக பணிபுரிந்தபோது கேணிக்கரை காவல் நிலைய ஆய்வாளரின் வேண்டுகோளின்பேரில் இராமநாதபுரம் கேணிக்கரை காவல் நிலைய குற்ற எண். 150/2021 வழக்கு சம்மந்தப்பட்ட பனையடியான் வயது 48 என்ற ஆண் பிரேத்தின் மீது நான் அன்று காலை 10.45 மணிக்கு உடற்கூராய்வு செய்தேன்.

அவரது உடலை பரிசோதனை செய்தபோது கீழ்க்காணும் வெளிக்காயங்கள் காணப்பட்டன.

1. தலையில் இடதுபகுதியில் ஒரு வெட்டுக்காயம் 3 X 2 X 1 செமீ அளவில் இருந்தது.

2. வலதுபக்க மார்பின் பின்புறத்தில் 7 X 2 X 1 செமீ அளவில் ஒரு வெட்டுக்காயம் இருந்தது.

3. வயிற்றின் பின்பகுதியில் 9 X 2 X 1 செமீ அளவில் ஒரு வெட்டுக்காயம் இருந்தது.

4. வலதுகால் மூட்டின் பின்பகுதியில் 5 X 2 X 1 செமீ அளவில் ஒரு வெட்டுக்காயம் இருந்தது.

5. இடதுதொடையின் பின்பகுதியில் இடுப்புக்கு கீழே 5 X 2 X 1 செமீ அளவில் ஒரு வெட்டுக்காயம் இருந்தது.

மார்புப்பகுதியை திறந்து பார்த்தபோது வலது நுரையீரல் பகுதியில் 200 மிலி இரத்தம் கசிந்து காணப்பட்டது. நுரையீரலும் அடிபட்டு காணப்பட்டது. வயிற்றுப்பகுதியை திறந்து பார்த்தபோது வயிறு காலியாக இருந்தது. சிறுநீரகம், கல்லீரல், மண்ணீரல் சீராக இருந்தது. தலைப்பகுதியை திறந்து பார்த்தபோது வலது முன்பக்கம் மற்றும் வலதுபக்கவாட்டு தலை எலும்பு உடைந்து காணப்பட்டது. மூளை இரத்தம் கோர்த்து காணப்பட்டது. உடல் உள்ளுறுப்புகள் பிரேத கூராய்வின்போது சேகரிக்கப்பட்டு ஆய்வுக்கு அனுப்பப்பட்டது. உடல் உள்ளுறுப்புகளை வேதியியல் ஆய்வு செய்ததில் அவற்றில் ஆல்கஹால் காணப்பட்டதாக விஸ்ரா அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. என்னிடம் காட்டப்படுவது அந்த விஸ்ரா அறிக்கைதான். 19.04.2021 தேதியிட்ட விஸ்ரா அறிக்கை **அ.சா.ஆ.12/அ.சா.21**. இறந்தநபர் தலை மற்றும் உடலில் ஏற்பட்ட காயங்களினாலும், இரத்தப்போக்கினாலும், அதிர்ச்சியினாலும் இறந்துள்ளார் என்று நான் இறுதி கருத்துரை வழங்கினேன். Homicide Causing Intraparenchymal Hemorrhage and Hemorrhagic Shock and Multiple Lacerated Injury என்று இறப்பிற்கான காரணத்தை இறுதி கருத்துரையில் நான் தெரிவித்துள்ளேன். 06.03.2021 தேதியிட்ட சடலக்கூராய்வு அறிக்கை **அ.சா.ஆ.13/அ.சா.21**. 27.04.2021 தேதியிட்ட இறுதி கருத்துரை **அ.சா.ஆ.14/அ.சா.21**. மேற்சொன்ன பிரேதத்தில் காணப்பட்ட வெட்டுக்காயங்கள் தற்போது என்னிடம் காட்டப்படும் அருவாளால் ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது. (சா.பொ.1 அருவாளை பார்த்து சாட்சி சாட்சியம் சொன்னார்) மேற்சொன்ன பிரேதத்தில் காணப்பட்ட எலும்புஉடைப்பு தற்போது

என்னிடம் காட்டப்படும் சவுக்குக்கட்டையால் ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது. (சா.பொ.2 சவுக்குக்கட்டையைப் பார்த்து சாட்சி சாட்சியம் சொன்னார்) ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.**